**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 72 of 2022

Depositions of PW -4 witness for ________ Prosecution / Defence / Court

Name : சிவா

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of November** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது கிருஷ்ணகிரி வனக்கோட்டத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ஆம் ஆண்டு கோவை வனக்கோட்டம் கோவை வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்த பொழுது மேற்படி வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தும் ஆவணங்கள் அடிப்படையில் என்னால் 2021 ஆம் ஆண்டு ஆ படிவம் தாக்கல் செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டு 12.09.2019 ஆம் தேதி மாலை 4.30 மணி அளவில் மாவட்ட வன அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவல் அடிப்படையில் தடாகம் பிரிவு வனவர் சாரம்மாள் மற்றும் நாகராஜ் வனக்காப்பாளர் தடாகம் தெற்கு சுற்று மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் ஜெயபிரகாஷ் ஆகியோர் அரசு வாகன எண் TN 38 G 0932 வாகனத்தை எடுத்துக்கொண்டு 96/1 பிள்ளையார் கோவில் வீதி, செந்தில் நகர், சோமனூர், சூலூர் தாலுகா என்ற வீட்டில் உள்ள கருணாமூர்த்தி தகப்பனார் பெயர் சுப்பிரமணி என்பவர் வீட்டில் விசாரணை செய்த பொழுது ஏற்கனவே அவர் வளர்த்து வந்த மீன் தொட்டியில் பவளப்பாறைகள்

வைத்திருந்ததாகவும் அதனை விற்பனை செய்வதற்காக ஓஎல்எக்ஸ் என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ததாகவும் தெரிவித்தார்.

2. மேலும் அவராக முன்வந்து இருந்த ஆறு பவளப்பாறைகளை வனவர் வசம் ஒப்பவித்துள்ளார். மேற்படி வனவர் ஸ்தல மகஜர் மற்றும் கைப்பற்றுதல் தயார் செய்து சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் பெற்றுள்ளார். மேலும் H நமுனா 186919 நாள் 12.09.2019 வனவரை பதிவு செய்யப்பட்டு பின்பு வனக்காப்பாளர் ஜெயபிரகாஷ் என்பவர் எதிரியிடம் குற்றம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று சாட்சிகள் முன்னிலையில் பெற்றுள்ளார். அரசு வாகனத்தில் வனச்சரக அலுவலகம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களின் உண்மை தன்மை அறிய முடியாமல் இருந்ததால் எதிரியை பிணையத்தில் விடுவிக்கப்பட்டார். மேற்படி பவளப்பாறை ஆனது 1972 ஆம் வருடம் வன உயிரினம் பாதுகாப்பு சட்டம் பட்டியல் 1(4) A வன உயிரின பொருட்களாகும்.

3. மேற்படி வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 இன் படி பிரிவு 9 R/W 2 மற்றும் பிரிவு 39, 51 தண்டனைக்குரிய குற்றமாகும். மேற்படி பிடிப்பொருட்களை உண்மை தன்மை அறியும் பொருட்டு DIRECTOR ZOOLOGICAL SURVEY OF INDIA, KOLKATTA ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு 04.12.2020 ஆம் ஆண்டு ஆய்வறிக்கையில் இரண்டு மாதிரிகள் அனுப்பப்பட்டதில் ஒன்று உண்மையான பவளப்பாறை என்றும் மற்றொன்று சுண்ணாம்பு கல் எனவும் ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றது. ஆய்வறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் நான் நீதிமன்ற நடுவர் முன்பு ஆஜர்ப்படுத்தப்பட்டு PR. NO. 14/2021 DATE 23.01.2021 ம் தேதியன்று கிடைக்கப்பெற்றேன். மேற்படி பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு வனச்சரக அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்க உத்தரவிட்டேன். பின்பு என்னால் ஆ படிவம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரிதான். எதிரி ஓஎல்எக்சில் விளம்பர பதிவேற்றம் செய்யப்பட்டதால் தான் மேற்படி அவரிடம் பவளைப்பாறைகள் இருந்ததாக விபரம் எங்கள் அலுவலகத்திற்கு தெரிய வந்தது என்றால் சரிதான். எதிரி ஓஎல்எக்சில் பதிவேற்றம் செய்யப்பட்டதாக சொல்லப்படும் விபரங்களை சேகரித்து நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஸ்தல மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்பதற்கான நேரம் இல்லையென்றால் சரிதான். மேலும் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பவளப்பாறைகள் வகை, WEIGHT, COLOUR போன்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் எதிரி கடலில் இருந்து பவளைப்பாறைகள் கொண்டு வந்ததாக எந்த விபரங்களும் இல்லை என்றால் சரிதான்.

2. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பாக நாகர்கோவிலைச் சேர்ந்த தங்கேஸ்வரன் என்பவரிடமிருந்து வாங்கியதாக சொல்லி உள்ள நிலையில் தங்கேஸ்வரன் அவர்களை நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. மேலும் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னைப் போலவே தங்கேஸ்வரன் அவர்களிடமிருந்து கார்த்தி என்பவரும் பவளப்பாறைகள் வாங்கியதாக சொல்லி உள்ள நிலையில் அவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை. நான் அனுப்பிய மாதிரிகளில் இரண்டும் வேறுபட்டு அறிக்கை கிடைக்கப் பெற்ற நிலையில் மீதமிருந்த நாலு பவளப்பாறைகளை ஆய்வுக்கு உட்படுத்தினேனா என்றால் அனுப்பவில்லை.

3. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் அனைத்தும் LIMESTONE என்றால் சரியல்ல. எதிரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் LIMESTONE என்றும் வழக்கிற்காக எங்களிடம் இருந்த மாதிரிகளை அனுப்பி அவர்களாக அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.17 20:02:29 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**